**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **112/2024** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | குப்பம்மாள் @ சுப்புலெட்சுமி | CASTE | : | |
| W/O | M.ராஜேந்திரன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | இடையப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **55** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனது அப்பா பெயர் அழகர்செட்டியார். எனது உடன்பிறந்தவர்கள் யாருமில்லை. இந்த வழக்கை எனது அப்பா 2000ம் ரூபாய் ஈடுகடன் 1980ல் வாங்கியதற்காக தாக்கல் செய்து உள்ளேன். மேற்படி கடனை கிணற்றில் சுற்றுசுவர் கட்டுவதற்காக வாங்கினார். அப்போது எனக்கு 10 அல்லது 12 வயது இருக்கும். அப்போது விவசாயம் செய்து கொண்டு இருந்தோம். எனது கணவர் பெயர் ராஜேந்திரன். எனது கணவரும எனது ஊரை சேர்ந்தவர்தான். இந்த தாவா வழக்கின் 1ம் பிரதிவாதி சின்னாளப்பட்டியை சேர்ந்தவர். 1ம் பிரதிவாதியின் அப்பாவின் பூர்வீகம் எனது ஊர்தான் என்றாலும் அவரது உறவினர்கள் எனது ஊரில் வசிக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2. 1982ல் நான் இளவர் என்றால் சரிதான். எனது அப்பா பள்ளிக்கூடத்தில் படிக்கவில்லை. எனது அப்பா ஊரில் முக்கியஸ்தர் கிடையாது. எனது அப்பா வழக்கு சொத்திற்கு அருகே உள்ள எங்களது மற்ற சொத்துக்களை பல நபர்களிடம் அடமானம் வைத்து அதை முறைப்படி பதிவு ரத்து செய்து உள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.